**புதுச்சேரி அரசு**

**துணைநிலை ஆளுநர் செயலகம்**

**No. LGS/PRO/2021** **07 ஜூன், 2022**

# பத்திரிகை செய்தி

புதுச்சேரி, சரக்குகள் & சேவை வரி மற்றும் மத்திய கலால் வரி இயக்குநரகம் மற்றும் ஆரோவில் நிர்வாகமும் இணைந்து நடத்தும் ஒரு நாள் தூய்மை பணி மற்றும் மரம் நடும் திட்டத்தின் நிறைவு விழா ஆரோவில் நகரத்தில் இன்று(07-06-2022) நடைபெற்றது. மாண்புமிகு துணைநிலை ஆளுநர் டாக்டர். தமிழிசை சௌந்தரராஜன் நிறைவு விழாவில் கலந்து கொண்டு மரக் கன்றுகள் நட்டார். விழாவில் ஆரோவில் செயலர் திருமதி ஜெயந்தி ரவி, ஜிஎஸ்டி ஆணையர் பத்மஸ்ரீ மற்றும் அதிகாரிகள் கலந்த கொண்டனர். கலை நிகழ்ச்சி நடத்திய குழுவினரை துணைநிலை ஆளுநர் பாராட்டினார். விழா நிகழ்ச்சியில் துணைநிலை ஆளுநர் ஆற்றிய உரையின் சுருக்கம்.

- பாரதப் பிரதமர் அறிமுகப்படுத்திய தூய்மை இந்தியா திட்டத்தினால் நாட்டில் தொற்றுநோய் சிகிச்சைக்காக ஆண்டுதோறும் செலவு செய்யக்கூடிய பெருமளவு பணம் மிச்சப்படுத்தப்படுகிறது. தொடக்கத்தில் இது சுமார் 60 ஆயிரம் கோடியாக இருந்தது. தற்போது அதிகரித்து இருக்கும்.
- தூய்மை இந்தியா திட்டம் பல்வேறு நிலைகளில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தூய்மையான சுற்றுப்புறத்தை ஏற்படுத்துதல், கழிப்பறைகளைக் கட்டுதல், திறந்தவெளி கழிப்பறை இல்லாத பகுதிகளை உருவாக்குதல் ஆகியவற்றில் பாரதப் பிரதமர் கவனம் செலுத்தினார்.
- திறந்தவெளி கழிப்பிடம் இல்லாத மாநிலங்களின் புதுச்சேரியும் ஒன்று. இந்த சாதனையைப் படைத்த புதுச்சேரி மக்கள் அனைவருக்கும் எனது பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.
- இன்றும்கூட, தலைமைச் செயலர் மற்றும் செயலர்களுடன் நடைபெற்ற கூட்டத்தில் தூய்மையான மற்றும் பசுமையான புதுச்சேரியை உருவாக்குவற்கான திட்டங்களைச் செயல்படுத்துவது குறித்து ஆலோசனை நடத்தப்பட்டது.
- தூய்மை மற்றும் பசுமைச் செயல்பாடுகளில் இன்று காலை முதல் பள்ளி கல்லூரி மாணவர்கள், அதிகாரிகள் மற்றம் மக்கள் பிரதிநிதிகள், பஞ்சாயத்து அமைப்புகள் ஈடுபட்டு வருவதை அறிந்து மகிழ்ச்சி அடைகிறேன்.
- இந்த திட்டத்தை அறிமுகப்படுத்திய போது பாரதப் பிரதமர் குறிப்பிட்டிருந்தார். ஒருமுறை காந்தியடிகளை, உங்களுக்கு தூய்மையான இந்தியா வேண்டுமா அல்லது சுதந்திரமான இந்தியா வேண்டுமா என்று கேட்டபோது உடனடியாக முதலில் எனக்கு தூய்மையான இந்தியா தான் வேண்டும். பிறகுதான் சுதந்திரமான இந்தியா என்று

குறிப்பிட்டாராம். ஏனென்றால் தூய்மையான இந்தியாவில் நோய் இருக்காது, நோய்த் தொற்று இருக்காது.

- இந்த நிகழ்ச்சியின் ஒரு பகுதியாக தியானம் செய்யப்பட்டிருக்கிறது. அரவிந்தர் குறிப்பிட்டதைப் போல நமக்கு விடுதலை மட்டுமல்ல ஆன்ம விடுதலையும் அவசியம். அப்போதுதான் மனமும் உடலும் ஆரோக்கியமாக இருக்கும்.
- சுற்றுச்சூழல் தூய்மையாக இருக்கும் போது உற்சாகம் அடையும். இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்ட அனைவருக்கும் எனது பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.
- பாரதப் பிரதமர் அறிவித்த இந்த ஆசாதி கா அம்ரித் மகோத்சவ் கொண்டாட்டங்கள் மூலமாக பல சிறப்பான நிகழ்ச்சிகள் நடத்தி சுதந்திர இந்தியாவின் பெருமையை உணருகிறோம். இந்த திட்டத்தின் மூலம் தூய்மையான இந்தியாவை பசுமையான இந்தியாவை நாம் விரைவில் உருவாக்க முடியும்.